


திருவள்ளூர் மாவட்டம், மணவாளநகர் கே.இ.என்.சி. அரசு மேல்நிலைப்பள்ளியில் அமெரிக்கன் இந்திய நிறுவனம் சார்பாக ஸ்டெம் (STEM) கண்டுபிடிப்பு மற்றும் கற்றல் மையங்கள் மாவட்டத்தின் 5 பள்ளிகளில் ரூ.1.38 கோடி மதிப்பில் நிறுவப்பட்டுள்ளது,இப்பள்ளியில் அம்மாதிரி கற்றல் மையத்தினை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் சட்டமன்ற உறுப்பினர்வி.ஜி.ராஜேந்திரன், முதன்மை கல்வி அலுவலர் எஸ்.தேன்மொழி, கே.இ.என்.சி. அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் ஞானசேகரன், அமெரிக்கன் இந்திய நிறுவன திட்ட இயக்குநர் முனைவர்.டி.பாஸ்கரன், மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன், ஒன்றிய செயலாளர் கே. ஹரி கிருஷ்ணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் அங்கம்பாக்கம் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் க.சுந்தர் எம்.எல்.ஏ. பார்வையிட்டு மாற்றுத்திறனாளி மனு தீர்வு கண்டு சான்றிதழ் வழங்கினார் உடன் வாலாஜாபாத் வட்டாட்சியர். மோகன் குமார். ஒன்றிய செயலாளர் க.குமணன், ஒன்றிய குழு துணை தலைவர் திருமதி. திவ்யப்பிரியா இளமது, ஊராட்சி மன்ற தலைவர்கள் து.ஏழுமலை, டி.எல்.தயாளன், கோ.கமலக்கண்ணன், திருமதி.சித்ரா பாபு, திருமதி.கீதா ராணி சங்கர், உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## தர நிர்ணய ஆய்வகம் திறப்பு விழா, புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் –

# களப்பணிகள் மேற்பார்வை கைப்பேசி செயலி!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, ஜூலை 25-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (24.07.2025) சென்னை, தேனாம்பேட்டை, டிஎம்ஸ் வளாகத்தில் உள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநரகத்திலிருந்து, தர நிர்ணய ஆய்வகத்தினை (EQAS) திறந்து வைத்து, புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் களப்பணிகள் மேற்பார்வை கைபேசி செயலியினை வெளியிட்டு, மருத்துவர்களின் விருப்ப பங்களிப்பு தொகுப்பு நிதியிலிருந்து (Corpus Fund) பணியில் இருக்கும் போது உயிர்நீத்த மருத்துவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.1 கோடி நிதி வழங்கி பேசினார்.

அவர் ஆற்றிய உரை வருமாறு:-

மருத்துவத்துறையில் நோய் கண்காணிப்பு, நோய் தடுப்பு மற்றும் நோய் சிகிச்சைகள் இவற்றிற்கான வழிமுறைகளில் ஆய்வக சேவை என்பது இன்றியமையாத பங்களிப்பாக இருந்து வருகிறது. நோய் கண்காணிப்பு, சிகிச்சை, தடுப்பு ஆகிய மூன்று வழிமுறைகளுக்கும் ஆய்வகம் இன்றியமையாதது மட்டுமல்ல இதனை வைத்துதான் நோய் தடுப்புகளுக்கான நடவடிக்கைகளை எடுக்க இயலும். பொது சுகாதாரத்துறையில் இயங்கிக் கொண்டிருக்கும் 2336 ஆரம்ப சுகாதார நிலையங்களியல் இயங்கிக் கொண்டிருக்கும் ஆய்வகங்கள் நோயினைக் கண்டறிவதற்கும், அதற்குரிய சிகிச்சை முறைகளை மேற்கொள்வதற்கும், நோய் பரவலை கண்காணிப்பதற்கும் நோய்த்தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு இன்றியமையாத பணிகளை செய்து வருவது இந்த ஆய்வகங்கள். ஆய்வகங்கள் கூடுதலான வகையில் ஏற்படுத்தி தந்திருந்தாலும் அதற்கான கட்டமைப்பை மேம்படுத்திக் கொண்டிருந்தாலும், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இந்த ஆய்வகங்கள் செயல்படுவது உறுதிபடுத்திக் கொண்டிருந்தாலும் அவைகளெல்லாம் இன்றைக்கு தரமாக இருக்கின்றதா என்பதெல்லாம் தொடர்ந்து கண்காணிப்பது என்பது அவசியமான ஒன்றாகும். தமிழ்நாடு அரசால் மக்களுக்கு பயன்படும் திட்டங்களான மக்களைத் தேடி ஒருங்கிணைந்த ஆய்வக திட்டம் மூலம் ஆய்வக சேவைகள் மேலும் வலுப்படுத்தப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து ஆய்வக மாதிரிகள் உயர்நிலை ஆய்வகங்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டு, முடிவுகள் வந்துக் கொண்டிருக்கிறது. ஆய்வகங்களில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் தரத்தை உறுதி செய்வதற்கு தமிழ்நாட்டில் இயங்கிக் கொண்டிருக்கும் 2336 ஆரம்ப சுகாதார நிலையங்களின் ஆய்வகங்களில் சிம்சி வேலூர் மருத்துவக்கல்லூரியில் உயிர்வேதியியல் ஆய்வகம் முறையாக செயல்படுத்தப்படுகின்ற ஆய்வகத்தில் பங்கேற்கின்றன. இதற்கு ஒவ்வொரு வருடமும் ரூ.52 இலட்சம் பொது சுகாதாரத்துறையின் சார்பில் செலவிடப்பட்டு வருகிறது. ஆனால் அரசுத் துறைகளினாலோ அல்லது சார்பு நிறுவனங்களிலாலோ தர நிர்ணய ஆய்வகம் செயல்படுத்துப்படுவதில்லை.

தமிழ்நாட்டில் சிம்சி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மட்டுமே தர நிர்ணயம் என்பது சாத்தியமான ஒன்றாகும். இதனை கருத்தில் கொண்டு இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் பொது சுகாதாரத்துறையின் கீழ் இயங்கும் மாநில பொது சுகாதார ஆய்வகத்தில் ரூ.1.13 கோடி மதிப்பீட்டில் தர நிர்ணய ஆய்வகம் ஒன்று உருவாக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.



இதற்கு முன்னாட்டமாக தர நிர்ணய திட்டம் திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இன்று முதல் தொடங்கப்பட உள்ளது. அதற்கான உபகரணங்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்த திட்டத்திற்கென்று பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட கைபேசி செயலியும், விளக்க கையேடும் ஆய்வக பயன்பாட்டிற்காக தற்பொது வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த முன்னோட்ட திட்டம் திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு, சர்வதேச தர சான்றிதழ் NABL நிறுவனத்தால் பெற்று, வரும் ஜனவரி 2026 ஆம் ஆண்டு முதல் அனைத்து மாவட்டங்களிலும் இயங்கும் அரசு ஆய்வகங்களுக்கும் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டிருக்கிறது. இத்தர நிர்ணய ஆய்வகம் தமிழ்நாட்டில் மருத்துவத்துறையின் கீழ் இயங்கும் அனைத்து ஆய்வகங்களுக்கும் தர நிர்ணய பரிசோதனைகள் (Quality Assurance) இலவசமாக வழங்கப்படவுள்ளது. மேலும், இந்த தர நிர்ணய ஆய்வக சேவைகள் தமிழ்நாடு மட்டுமல்லாது பிற மாநிலங்களில் இயங்கும் அரசு மற்றும் தனியார் ஆய்வகங்களுக்கும் அரசு நிர்ணயிக்கும் மிகக்குறைந்த கட்டணத்தில் விரிவுபடுத்தப்பட்டு மருத்துவ சேவைகளின் தரத்தினை உறுதிபடுத்துவதில் முக்கிய பங்காற்ற இருக்கிறது.

எனவே, தமிழ்நாடு ஏற்கனவே பல்வேறு சிறப்பு திட்டங்களின் வாயிலாக இந்தியாவிற்கே முன்னோடி மாநிலமாக விளங்கிக்கொண்டிருக்கிறது என்பது அனைவரும் உணர்ந்த ஒன்று என்றாலும், தர நிர்ணய ஆய்வக சேவைகளில் தமிழ்நாடு இந்தியாவிற்கு ஒரு முன் மாதிரியாக, இந்தியாவிலிருக்கின்ற மற்ற அரசு மருத்துவமனைகளுக்கு ஒரு தொடக்கமாக இது இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்தவகையில் இந்த மிக சிறப்பான சேவையை பொது சுகாதார துறைக்கு கொண்டு வந்திருக்கின்ற சம்மந்தப்பட்ட நம்முடைய இயக்குநர் உள்ளிட்ட அலுவலர்களை மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் மகிழ்ச்சியோடு பாராட்டவும், அவர்களுடைய கடமை உணர்வை போற்றவும் கடமைபட்டிருக்கிறேன்.

### புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து

அதோடு மட்டுமல்லாது இந்த நிகழ்ச்சியின் வாயிலாக Swasti - The Health Catalyst - உடன் காலநிலை மாற்றங்களினால் ஏற்படுகிற தொற்று நோய்களை முன்பே கண்டறிவதற்குரிய நடவடிக்கைகள், கழிவு நீரில் உள்ள நுண்கிருமிகளை ஆய்வு செய்து நோய் பரவலை முன் கூட்டியே அறிதல் குறித்தான புரிந்துணர்வு ஒப்பந்தம் தற்போது உங்களின் முன்னிலையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாது Centre for Health Research and Innovation (CHRI) - உடன் டெங்கு, மலேரியா, சிக்கன் குனியா தடுப்பு நடவடிக்கைகள் குறித்தான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதோடு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIDCO) கீழ் செயல்படும் TANSAM - உடன் செயற்கை நுண்ணறிவு (Ai) மூலமாக நீரில் குளோரின் அளவினை கண்டறிந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு உறுதி செய்யப்படுகிறது அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் தற்பொது கோரப்பட்டிருக்கிறது. குடிநீரில் குளோரின் அளவு மட்டுமே காலரா போன்ற பெருவியாதிகளுக்கு காரணமாக கடந்த காலங்களில் இருந்து வந்தது. அதோடு மட்டுமல்ல வயிற்றுப்போக்காக இருந்தாலும் பல்வேறு விஷயங்களில் இன்றைக்கு குடிசை பகுதிகளில் மக்கள் பாதிக்கப்படுகிறபோது இந்த குளோரின் அளவை கண்டறிவது பாதுகாக்கப்பட்ட குடிநீரை மக்களுக்கு தருவது ஒரு சவாலாக இருக்கிற சூழலில் தமிழ்நாடு முதலீட்டுக் கழகத்தின் கீழ் இயங்குகிற TANSAM உடன் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மழைக்கால, வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்னால் அமைக்கப்பட்டிருப்பது என்பது மக்களுக்கு ஒரு நல்ல குடிநீர் ஆதாரத்தை தருகிற ஒரு நல்ல சூழலாக அமையும் என்று கருதுகிறேன். அந்த வகையில் மண்டல நீர் பகுப்பாய்வகங்களில் மாதிரிகளை சேகரிக்கும் பயண திட்டங்களை செயலி மூலம் இன்றைக்கு செயல்படுத்த முனைந்திருக்கிறோம்.

டெங்கு தடுப்பு களப்பணியாளர்கள் கொசுப்புழு ஒழிப்பு நடவடிக்கைகளை செயலி மூலம் கண்காணிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்றைக்கு போடப்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு பயனுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மூலம் இந்த துறையின் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு இந்த துறையின் சார்பில் பொது சுகாதாரத்திற்கான ஒரு பெரிய ஏற்கனவே இருக்கின்ற சிறிய அளவிலான அச்சுறுத்தல், அறை கூவல்களுக்கு இன்றைக்கு நாம் தீர்வு காண்கிற வகையில் பல்வேறு வகையிலான இந்த ஒப்பந்தங்கள் போடப்பட்டிருப்பது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. எனவே அரசு நிர்வாகத்தோடு இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களை போட்டிருக்கிற தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு என்னுடைய மகிழ்ச்சி நிறைந்த பாராட்டுக்களை தெரிவித்து அவர்களுக்கு நன்றியினையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### பணியிலிருக்கும்போது உயிரிழந்த மருத்துவர்களின் குடும்பங்களுக்கு ரூ.1 கோடி நிதி

அதேபோல் இறுதியாக இன்னோறு நிகழ்ச்சியும் கூட பணியின் போது உயிர் இழந்த 4 மருத்துவர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா ரூ.1 கோடி வீதம் ரூ.4 கோடி நிதி வழங்கப்பட்டுயிருக்கிறது. தமிழ்நாடு அரசு மருத்துவர்கள் பணியாற்றி வருகின்ற காலத்தில் எதிர்பாராத வகையில் உயிர் இழக்க நேரிட்டால் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு உதவி தொகை வழங்கிட மருத்துவர்களின் விருப்ப பங்களிப்பு வைப்பு நிதி எற்படுத்தப்பட்டு அது 2020 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அது ஒவ்வொருவருடைய இறப்பிற்கும் ரூ.50 இலட்சம் 2020 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பணியின் போது உயிரிழக்கும் மருத்துவர்களுக்கு மருத்துவர்களின் விருப்ப பங்களிப்பு வைப்பு நிதி தொகையிலிருந்து ரூ.1 கோடி நிதி வழங்கிட 2021 அக்டோபர் திங்கள் 12 தேதி அன்று அரசாணை வெளியிடபட்டது. அரசாணை வெளியிடப்பட்டதை தொடர்ந்து ரூ.1 கோடி தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொறு மருத்துவரும் விருப்பத்தின் அடிப்படையில் இந்த நிதி பங்களிப்பில் சேர்ந்து பங்களிப்பாக 2020-2021 ஆம் ஆண்டுகளுக்கு ரூ.6000/- ஒட்டுமொத்தமாகவே செலுத்தியிருகிறார்கள். அதன்படி மாற்றி 2022 ஆம் ஆண்டு முதல் மாதம்தோறும் ரூ.500/- ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது. அந்த வகையில் மருத்துவர்களின் விருப்ப பங்களிப்பு வைப்பு தொகுப்பு நிதியிலிருந்து முதல் கட்டமாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பணியின் போது உயிரிழந்த 13 மருத்துவ குடும்ப வாரிசுதாரர்களுக்கு மொத்தமாக ரூ.8.5 கோடி நிதிக்கான காசோலைகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருகரங்களால் 13.04.2023 அன்று தலைமைச் செயலகத்தில் மருத்துவ சங்க நிர்வாகிகளின் முன்னிலையில் வழங்கப்பட்டது. மேலும், 2022-2023 ஆம் ஆண்டு பணியின் போது உயிரிழந்த 7 மருத்துவ குடும்ப வாரிசுதாரர்களுக்கு நாம் இங்கு ஒரு நிகழ்ச்சியின் வாயிலாக ரூ.7 கோடிக்கான காலோலைகளை 2024 பிப்ரவரி திங்கள் 27 தேதி அன்று வழங்கப்பட்டது. மூன்றாம் கட்டமாக 2022-23 ஆம் ஆண்டில் பணியின் போது உயிர் இழந்த 6 மருத்துவ குடும்ப வாரிசுதாரர்களுக்கு தலா ரூ.1 கோடி வீதம் ரூ.6 கோடி 2025 ஜனவரி திங்கள் 10 ஆம் தேதி வழங்கப்பட்டது. இத்திட்டத்தில் இதுவரை பணியில் இருக்கும் போழுது தன்னுடைய இன்னுயிர் இழந்த 26 மருத்துவ குடும்பங்கள் பயன்பெறும் வகையில் நிதி வழங்கப்பட்டுள்ளது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்கள் விழா பேரூரையாற்றினார்கள்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு. ராஜமூர்த்தி, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் (பொ) மரு.தேரணிராஜன், குடும்பநல இயக்குநர் மரு. சித்ரா, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் (ESI) இயக்குநர் (பொ) மரு.பாலசந்தர், கூடுதல் இயக்குநர் மரு.சோமசுந்தரம், இணை இயக்குநர் மரு.செந்தில், துணை இயக்குநர் ராஜீ, மருத்துவ சங்க நிர்வாகிகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் நிர்வாகிகள், மருத்துவர்கள் உடனிருந்தனர்.





171 வது வட்டத்தில் மயிலை கிழக்கு பகுதியில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மைலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலைத.வேலு எம்.எல்.ஏ. ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமை தொடங்கி வைத்தார். உடன் மண்டல குழு தலைவர் இரா.துரைராஜ், பகுதிச் செயலாளர் எஸ் முரளி, மாமன்ற உறுப்பினர் திருமதி கீதா முரளி, வட்டக் கழக செயலாளர் துரைபார்த்திபன், பா.பொன்னுசாமி, மா.பா அன்பு, எல்.உதயகுமார், ஆர்.பாலு, எஸ்.சரவணன், பி.ஆர்.ரமேஷ் மற்றும் மாவட்ட பகுதி கழக வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு இலவச வீட்டு மனை பட்டா, குடும்ப அட்டை, முதியோர் ஓய்வூதியம் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் பயன் பெறுவதற்கு மனு அளித்தனர்.

